ஏ.ட.123

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

**Name of the Test**

| | |
|---|---|
| The Civil and Criminal Judicial test for Members of the Judicial Department - Part – II (Without Books) | 116 |

Maximum Time: Two Hour

Maximum Marks: 80

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 80 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 80 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Within what period of time a Caveat lodged will remain in force from the date of its filing?
ஒரு கேவியட் மனு தாக்கல் செய்த நாளிலிருந்து எத்தனை நாட்கள் அமலில் இருக்கும்?

(A) 30 days
30நாட்கள்

(B) 45 days
45 நாட்கள்

(C) 60 days
60 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

2. In a suit before Small Causes Court, a summon shall be for
சிறு வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றத்தின் முன் ஒரு வழக்கில், ஒரு அழைப்பாணை எதற்காக வழங்கப்பட வேண்டும்?

(A) for final disposal of the suit
வழக்கின் இறுதி முடிவுக்காக

(B) appearance of the defendant
பிரதிவாதி ஆஜராகுவதற்காக

(C) appearance of the plaintiff
வாதி ஆஜராகுவதற்காக

(D) for settlement of issues
பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக

3. ——————— is the process of enforcing or giving effect to the judgment, decree or order of a court.
நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஆணை அல்லது உத்தரவை அமல்படுத்தும் அல்லது செயல்படுத்தும் செயல்முறை ——————— என அழைக்கப்படுகிறது.

(A) Appeal
மேல்முறையீடு

(B) Execution
நிறைவேற்றம்

(C) Revision
சீராய்வு

(D) Review
மறு ஆய்வு

4. What is the maximum amount that can be awarded by the court as compensatory costs in respect of vexatious or false claims?
அலைக்கழித்தல் அல்லது தவறான உரிமைகோரல்களுக்கு இழப்பீட்டுச் செலவாக நீதிமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அதிகபட்சத் தொகை என்ன?

(A) Rs.1,000
ரூ. 1,000

(B) Rs.2,000
ரூ. 2,000

(C) Rs. 3,000
ரூ. 3,000

(D) Rs. 5,000
ரூ. 5,000

5. Upon whose application the court has power to transfer suits which may be instituted in more than one court?
யாருடைய விண்ணப்பத்தின் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்களில் தொடரக்கூடிய வழக்குகளை மாற்றுவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது?

(A) Plaintiff
வாதி

(B) Defendant
இணைவாதி

(C) Co-Plaintiff
பிரதிவாதி

(D) Third Party
மூன்றாம் தரப்பினர்

6. ————— is not held to be a legal representative.
————— சட்டப் பிரதிநிதியாக கருதப்படமாட்டார்.

(A) Executor
நிறைவேற்றுபவர்

(B) Administrator
நிர்வாகி

(C) Reversioner
பின்னடை உரிமையர்

(D) Official assignee
சொத்தாட்சி அதிகாரி

7. In an Execution proceeding, after the sale of immovable property ————— percent of purchase money should be deposited immediately in the court by the purchaser of the property.
நிறைவேற்றல் நடவடிக்கைகளில் அசையாச் சொத்தை விற்ற பிறகு, சொத்தை வாங்கியவர் உடனடியாக வைப்புத் தொகையாக விற்பனைக்கு வாங்கும் பணத்தில் ————— சதவிகித தொகையை நீதிமன்றத்தில் செலுத்துதல் வேண்டும்.

(A) 10%

(B) 15%

(C) 25%

(D) 30%

8. From which of the following decree, an appeal shall not lie?
மேல்முறையீடு பின்வரும் எந்த தீர்ப்பாணையில் இருந்து வராது?

(A) any decree passed by any court exercising original jurisdiction
அசல் அதிகார வரம்பைப் பயன்படுத்தி நீதிமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்ப்பாணை

(B) an ex parte decree
ஒரு எதிர்வாதமில்லா தீர்ப்பாணை

(C) consented decree
ஒப்புதல் தீர்ப்பாணை

(D) an ex parte appellate decree
ஒரு எதிர்வாதமில்லா மேல்முறையீட்டு தீர்ப்பாணை

9. When an immovable property forms one estate situated within the local limits of jurisdiction Court "A' and Court "B'. Which court can attach and sell the entire estate?
நீதிமன்றம் 'அ' மற்றும் நீதிமன்றம் 'ஆ' ஆகிய இரண்டு நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குள் ஒரு அசையாச் சொத்தின் ஒரு நிலத்சொத்து அமைந்திருக்கும் போது, எந்த நீதிமன்றம் முழு சொத்தையும் பற்றுகை செய்து விற்கலாம்?

(A) Court 'A'
நீதிமன்றம் 'அ'

(B) Court 'B'
நீதிமன்றம் 'ஆ'

(C) Court 'A' or Court 'B'
நீதிமன்றம் 'அ' அல்லது நீதிமன்றம் 'ஆ'

(D) Neither Court 'A' nor Court "B'
நீதிமன்றம் 'அ' அல்லது நீதிமன்றம் 'ஆ' இல்லை

10. In which of the following suit, an appeal is not allowed?
பின்வரும் எந்த வழக்கில் மேல்முறையீடு அனுமதிக்கப்படாது?

(A) suit value not exceeding one thousand rupees
வழக்கு மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருந்தால்

(B) suit value not exceeding five thousand rupees
வழக்கு மதிப்பு ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருந்தால்

(C) suit value not exceeding ten thousand rupees
வழக்கு மதிப்பு பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருந்தால்

(D) suit value not exceeding twenty five thousand rupees
வழக்கு மதிப்பு இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருந்தால்

11. What the Civil Court shall issue, in an application for execution of a decree for payment of money, for showing cause that why judgment debtor should not be committed to civil prison?
பணத்தைச் செலுத்துவதற்கான தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பத்தில், தீர்ப்புக் கடனாளியை ஏன் உரிமையியல் சிறையில் அடைக்கக் கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுவதற்காக, உரிமையியல் நீதிமன்றம் எதை வழங்கலாம்?

(A) Notice
அறிவிக்கை

(B) Summon
அழைப்பாணை

(C) Bailable Warrant
பிணைவிடு பிடியாணை

(D) Non bailable warrant
பிணையத்தில் விடா பிடியாணை

12. According to Civil Procedure Code, an auction purchaser who deposits the initial amount in the Court must pay the balance purchase money within ———— days from the date of the auction sale.
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி அசையாச் சொத்தின் ஏல விற்பனையின் ஆரம்பத் தொகையை நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக செலுத்திய ஏலம் சொத்தை வாங்குபவர், ஏல விற்பனை செய்யப்பட்டதேதியிலிருந்து ———— நாட்களுக்குள் மீதமுள்ள கொள்முதல் பணத்தை செலுத்துதல் வேண்டும்.

(A) 15 days
15 நாட்கள்

(B) 30 days
30 நாட்கள்

(C) 45 days
45 நாட்கள்

(D) 60 days
60 நாட்கள்

13. The petition to appeal before Supreme Court shall be disposed of within ———— days from the date of presentation of such petition.
உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான மனு, அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து ———— நாட்களுக்குள் தீர்க்கப்படும்.

(A) 30 days
30 நாட்கள்

(B) 45 days
45 நாட்கள்

(C) 60 days
60 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

14. Proclamation of sale should be drawn up by the court after giving notice to
———————— க்கு அறிவிப்பு கொடுத்த பிறகு விற்பனை பொது அறிவிப்பு நீதிமன்றத்தால் வரையப்பட வேண்டும்.

(A) Decree holder
தீர்ப்பாணை பெற்றவர்

(B) Judgment debtor
தீர்ப்பு கடனாளி

(C) Auction Bidder
ஏலம் எடுத்தவர்

(D) Both Decree holder and Judgment Debtor
தீர்ப்பாணை பெற்றவர் மற்றும் தீர்ப்பு கடனாளி இருவரும்

15. Garnishee is a
பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (கார்னிஷீ) என்பவர்

(A) Creditor of judgment debtor
தீர்ப்பு கடனாளிக்கு கடன் கொடுத்தவர்

(B) Creditor of decree holder
தீர்ப்பாணை பெற்றவருக்கு கடன் கொடுத்தவர்

(C) Debtor of judgment debtor
தீர்ப்பு கடனாளியின் கடனாளி

(D) Debtor of decree holder
தீர்ப்பாணை பெற்றவரின் கடனாளி

16. A person is said to be an indigent person when he is not entitled to property worth Rs.
ரூ. ———————— மதிப்புள்ள சொத்துக்கு உரிமை இல்லாத எந்த நபரும் வறியவர் என்று கூறப்படுகிறது.

(A) Rs. 1,000
ரூ.1,000

(B) Rs. 2,000
ரூ. 2,000

(C) Rs. 3,000
ரூ. 3,000

(D) Rs. 5,000
ரூ. 5,000

17. The expression "Judge" is defined in Section ———— of Civil Procedure Code.
"நீதிபதி" என்ற வெளிப்பாடு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ———— பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) Section 2(6)
பிரிவு 2(6)

(B) Section 2(7)
பிரிவு 2(7)

(C) Section 2(8)
பிரிவு 2(8)

(D) Section 2(9)
பிரிவு 2(9)

18. Application for indigent will be rejected, if the applicant has disposed of any property within ———— days next before the presentation of applications.
வறியவருக்கான விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு அடுத்த ———— நாட்களுக்குள் ஏதேனும் சொத்தை அப்புறப்படுத்தியிருந்தால், வறியவருக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(A) 15 days
15 நாட்கள்

(B) 30 days
30 நாட்கள்

(C) 45 days
45 நாட்கள்

(D) 60 days
60 நாட்கள்

19. An interim order of injunction cannot be granted by a Court of law against
இடைக்கால தடை உத்தரவை நீதிமன்றத்தால் ———— எதிராக வழங்க முடியாது.

(A) against land acquisition proceedings
நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக

(B) against demolition of property
சொத்து இடிப்புக்கு எதிராக

(C) against appointment of receiver
பேணுநரின் நியமனத்திற்கு எதிராக

(D) against sale of suit property
வழக்கு சொத்து விற்பனைக்கு எதிராக

20. In a summary suit, the defendant must appear before the Court within ———— days from the date of service of summons.
அழைப்பாணை சார்வான நாளிலிருந்து ———— நாட்களுக்குள், ஒரு சுருக்க முறை வழக்கின் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்.

(A) 7 days
7 நாட்கள்

(B) 10 days
10 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

21. A foreign judgement shall be considered as a conclusive when it has been
ஒரு வெளிநாட்டு தீர்ப்பு ———————— ஆக இருக்கும்போது அது அறுதியானதாக கருதப்படும்.

(A) pronounced by a competent court
அது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது

(B) founded on a breach of Indian law
அது இந்திய சட்டத்தின் மீறலின் அடிப்படையில் நிறுவபட்டிருக்கும் போது

(C) opposed to natural justice
அது இயற்கை நீதிக்கு எதிரானதாக இருக்கும்போது

(D) obtained by fraud
அது மோசடி மூலம் பெறப்பட்டிருக்கும் போது

22. Which of the following is prohibited by Doctrine of *Res Sub Judice*?
*ரெஸ் சப் ஜூடிஸ்* கோட்பாடு பின்வருவனவற்றில் எதை தடை செய்கிறது?

(A) institution of subsequent suit
பிந்தைய வழக்கினை தொடுத்தல்

(B) institution of interim application
இடைக்கால விண்ணப்பத்தினை தொடுத்தல்

(C) trial of subsequent suit
பிந்தைய வழக்கின் விசாரணை

(D) inquiry of interim application
இடைக்கால விண்ணப்பத்தின் விசாரணை

23. A pro forma defendant means
ஒரு பெயரளவு பிரதிவாதி என்பவர்

(A) a defendant against whom no relief is claimed
ஒரு வழக்கில் தீர்வழி கோராத பிரதிவாதி

(B) a defendant against whom actual releif is claimed
ஒரு வழக்கில் உண்மையான தீர்வழி கோரப்படும் ஒரு பிரதிவாதி

(C) a defendant in a cross suit
குறுக்கு வழக்கில் உள்ள ஒரு பிரதிவாதி

(D) an intervener to a suit
ஒரு வழக்கின் வழக்கிடை நபர்

24. Decree for ———— can be executed by an oral application.
———— க்கான தீர்ப்பாணையை வாய்வழி விண்ணப்பம் மூலம் செயல்படுத்தலாம்.

(A) Specific performance of contract
ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்திற்கான தீர்பபாணை

(B) An injunction
உறுத்துக் கட்டளைக்கான தீர்ப்பாணை

(C) Payment of money
பணம் செலுத்துவதற்கான தீர்ப்பாணை

(D) Specific movable property
குறிப்பிட்ட அசையும் சொத்துக்கான தீர்ப்பாணை

25. A person considered himself aggrieved by a decision on a reference from a Court of Small Causes may apply for
சிறு வழக்கு நீதிமன்றத்தின் ஒரு மேலாய்வு மீதான முடிவால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் நபர் ———— விண்ணப்பிக்கலாம்.

(A) Review
மறுஆய்வு

(B) Revision
சீராய்வு

(C) Appeal
மேல்முறையீடு

(D) Execution
நிறைவேற்றம்

26. An insolvent judgment debtor may be released from arrest by the court if he furnishes security within
ஒரு நொடிப்பு நிலை தீர்ப்புக் கடனாளி ———— காலத்திற்குள் பிணையம் வழங்கினால், நீதிமன்றத்தால் கைது செய்யப்படுவதில் இருந்து விடுவிக்கப்படலாம்.

(A) 1 month
1 மாதம்

(B) 2 months
2 மாதங்கள்

(C) 6 months
6 மாதங்கள்

(D) 1 year
1 வருடம்

27. Settlement of disputes outside the court under Section 89 of Civil Procedure Code is inserted by Amendment Act
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 89 இன் கீழ் நீதிமன்றத்திற்கு வெளியே சச்சரவுகளைத் தீர்ப்பது எந்த திருத்தச் சட்டம் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது?

(A) 2002
(B) 1999
(C) 1976
(D) 1972

28. ————— is a Special Proceeding.
————— ஒரு சிறப்பு நடவடிக்கை எனப்படும்.

(A) Arbitration
இசைவுத் தீர்ப்பு முறை

(B) Interpleader suit
இடைப்பாத்திய வழக்கு

(C) Government suits
அரசு வழக்குகள்

(D) Suits against Rulers of former Indian States
முன்னாள் இந்திய மாநிலங்களின் ஆட்சியாளர்களுக்கு எதிரான வழக்குகள்

29. If interrogatories are prolix, unnecessary or scandalous then the Court may order to ————— such interrogatories.
ஏதேனும் விடுவினாக்கள் தெளிவற்றதாக, தேவையற்றதாக அல்லது அவதூறாக இருந்தால், அத்தகைய விடுவினாக்கள் தொடர்பாக நீதிமன்றத்தால் ————— உத்தரவு பிறப்பிக்கப்படும்.

(A) set aside
தள்ளுப்படி செய்யும் உத்தரவு

(B) struck off
நீக்கும் உத்தரவு

(C) reject
நிராகரிக்கும் உத்தரவு

(D) proceed with
தொடரும் உத்தரவு

30. Which of the following will be issued by the Court if any person intentionally avoids service of summon to produce material documents?
ஒரு நபர் வேண்டுமென்றே முக்கியமான ஆவணங்களைத் தாக்கல் செய்யவதற்காக அழைப்பாணை சார்வு செய்தலைத் தவிர்த்தால் கீழ்க்கண்டவற்றில் எது நீதிமன்றத்தால் வழங்கப்படும்?

(A) Proclamation to produce the document
ஆவணத்தை தாக்கல் செய்வதற்கான பிரகடனம்

(B) Re-summon
மறு அழைப்பாணை

(C) Warrant
பிடியாணை

(D) Attachment of property
சொத்து பற்றுகை

31. If a person summoned under Section 30 of Civil Procedure Code fails to appear before the Court, then the Court may impose upon him a fine amount of
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 30ன் கீழ் சம்மன் பெறப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினால், நீதிமன்றத்தால் அவருக்கு அபராதத் தொகையாக ———————— விதிக்கப்படும்.

(A) Rs.1,000
ரூ.1,000

(B) Rs.2,000
ரூ.2,000

(C) Rs.5,000
ரூ.5,000

(D) Any amount at the discretion of court
நீதிமன்றத்தின் விருப்பப்படி எந்தத் தொகையும் விதிக்கப்படலாம்

32. Decree should be drawn within ———— days from the date of pronouncement of judgment.
தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ———————— நாட்களுக்குள் தீர்ப்பாணை வழங்கப்பட வேண்டும்.

(A) 10 days
10 நாட்கள்

(B) 14 days
14 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

33. If a suit is stayed, then the counter claim in such suit may be.
ஒரு வழக்கு நிறுத்திவைக்கப்பட்டால், அத்தகைய வழக்கின் எதிர் உரிமைகோரலானது.

(A) Stayed
நிறுத்தி வைக்கப்படும்

(B) Dismissed
தள்ளுபடி செய்யப்படும்

(C) Not to be proceeded with until stay is vacated
வழக்கு நிறுத்தி வைக்கும் உத்தரவு நீங்கும் வரை எதிர் உரிமைகோரலை தொடர முடியாது

(D) Proceeded with never minding the stay
வழக்கு நிறுத்தி வைக்கும் உத்தரவை பொருட்படுத்தாமல் எதிர் உரிமைகோரலைத் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யத் தொடரலாம்

34. If a plaint in a suit is insufficiently stamped by the plaintiff, then the Court may order to
ஒரு வழக்கில் உள்ள வழக்குரையை வாதி போதுமான அளவு முத்திரையிடப்படவில்லை என்றால், நீதிமன்றம் —————— உத்தரவை பிறப்பிக்கலாம்.

(A) stay the suit
வழக்கை நிறுத்தி வைக்கும் உத்தரவு

(B) return the plaint
வழக்குரையைத் திரும்பப் பெறுவதற்கான உத்தரவு

(C) reject the plaint
வழக்குரையை நிராகரிப்பதற்கான உத்தரவு

(D) dismiss the suit
வழக்கை தள்ளுபடி செய்ய உத்தரவு

35. Which of the following interrogatories are allowed by the Court?
பின்வரும் எந்த விடுவினாக்கள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகின்றன?

(A) Interrogatories which are scandalous or irrelevant
அவதூறான அல்லது பொருத்தமற்ற விடுவினாக்கள்

(B) Interrogatories which would involve disclosures injurious to public interest
பொது நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வெளிப்பாடுகளை உள்ளடக்கிய விடுவினாக்கள்

(C) Interrogatories which are related to any privileged communications between party and pleader
தரப்பினருக்கும் வழக்கறிஞருக்கும் இடையே ஏதேனும் சலுகை பெற்ற தகவல்தொடர்புகளுடன் தொடர்புடைய விடுவினாக்கள்

(D) Interrogatories which are destroying the case of adversary
எதிர் தரப்பினரின் வழக்கை அழிக்கும் விடுவினாக்கள்

36. How many times adjournment in a suit shall be granted during the hearing of such suit?
ஒரு வழக்கின் விசாரணையின் போது அத்தகைய வழக்கில் எத்தனை முறை ஒத்திவைப்பு வழங்கப்படும்?

(A) 6 times
6 முறை

(B) 5 times
5 முறை

(C) 3 times
3 முறை

(D) 7 times
7 முறை

37. Commissioner report should be submitted to the court within ———— period from the date of issue of commission.
ஆணையரின் அறிக்கையை ஆணையம் வழங்கிய நாளிலிருந்து ———— காலத்திற்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(A) 1 month
1 மாதம்

(B) 2 months
2 மாதங்கள்

(C) 3 months
3 மாதங்கள்

(D) 6 months
6 மாதங்கள்

38. Which of the following guardian in a lunatic suit is allowed by the Court to receive the property without requiring any security?
ஒரு பித்தர் வழக்கில் பின்வரும் எந்த காப்பாளர் எந்தொருப் பிணையமும் இல்லாமல் சொத்தைப் பெற நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகிறார்?

(A) Karta
கர்தா

(B) *De facto* guardian of the lunatic
பித்தரின் நிகழ்வுநிலை காப்பாளர்

(C) Guardian duly appointed by court
நீதிமன்றத்தால் முறையாக நியமிக்கப்பட்ட காப்பாளர்

(D) Guardian duly appointed by competent authority
தகுதிவாய்ந்த ஆணையத்தால் முறையாக நியமிக்கப்பட்ட காப்பாளர்

39. Every inquiry as to the question whether a person is an indigent person or not shall be made by
ஒரு நபர் வறியவரா இல்லையா என்ற கேள்விக்கான ஒவ்வொரு விசாரணையும் ———— ஆல் செய்யப்பட வேண்டும்.

(A) Presiding officer of the Court
நீதிமன்றத்தின் தலைமை அலுவலர்

(B) Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Commissioner
ஆணையர்

(D) Ministerial officer of the Court
நீதிமன்றத்தின் அமைச்சரக அலுவலர்

40. If an indigent person succeeds in a suit, then the court fee for such suit shall be recovered by
ஒரு வறியவர் ஒரு வழக்கில் வெற்றி பெற்றால், அத்தகைய வழக்குக்கான நீதிமன்றக் கட்டணம் ———————— வசூலிக்கப்படும்.

(A) by the Court
நீதிமன்றத்தால்

(B) by the Collector
மாவட்ட ஆட்சியர் மூலம்

(C) by the Co-plaintiff
இணை வாதி மூலம்

(D) by the Plaintiff
வாதி மூலம்

41. In a suit to redeem a subsequent mortgage, who cannot be joined as a party?
பிந்தைய அடமானத்தை மீட்டெடுப்பதற்கான வழக்கில், யாரை ஒரு தரப்பினராக இணைக்க முடியாது?

(A) Prior Mortgagor
முன் அடமானம் வைத்தவர்

(B) Prior Mortgagee
முன் அடமானம் பெற்றவர்

(C) Puisne Mortgagor
கீழ் அடமானம் வைத்தவர்

(D) Puisne Mortgagee
கீழ் அடமானம் பெற்றவர்

42. If any person breach an injunction order, then the Court may order such person to be detained in civil prison for ———————— days.
யாரேனும் ஒருவர் தடை உத்தரவை மீறினால், அத்தகைய நபரை ———————— நாட்களுக்கு உரிமையியல் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிடலாம்.

(A) 15 days
15 நாட்கள்

(B) 30 days
30 நாட்கள்

(C) 60 days
60 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

43. An injunction order granted shall be vacated under ———————— of Civil Procedure Code.
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ———————— கீழ், வழங்கப்பட்ட தடை உத்தரவு நீக்கப்படும்.

(A) Order 39 Rule 2A
கட்டளை 39 விதி 2A

(B) Order 39 Rule 3
கட்டளை 39 விதி 3

(C) Order 39 Rule 3A
கட்டளை 39 விதி 3A

(D) Order 39 Rule 4
கட்டளை 39 விதி 4

44. Legal Representative of any party should be impleaded within ———— days from the death of such party.
எந்தவொரு தரப்பினரின் சட்டப் பிரதிநிதியும் அத்தகைய தரப்பினரின் மரணத்திலிருந்து ———— நாட்களுக்குள் தன்னை வழக்குட்படுத்தல் செய்து கொள்ள வேண்டும்.

(A) 30 days
30 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 90 days
90 நாட்கள்

(D) 120 days
120 நாட்கள்

45. Procedures for "Friendly Suits" is dealt under ———— of C.P.C.
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை ———— "நட்புமுறை வழக்குகள்" தொடர்பான நடைமுறைகளைக் கையாள்கிறது.

(A) Order 32A
கட்டளை 32A

(B) Order 33
கட்டளை 33

(C) Order 35
கட்டளை 35

(D) Order 36
கட்டளை 36

46. Suits against Military, Naval men or Airmen are dealt under ———— of Civil Procedure Code.
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ———— கட்டளையின் கீழ், இராணுவம், கடற்படை வீரர்கள் அல்லது விமானப் படையினருக்கு எதிரான வழக்குகள் பற்றி வழங்கப்பட்டுள்ளது.

(A) Order XXVIII
கட்டளை XXVIII

(B) Order XXVII A
கட்டளை XXVIIA

(C) Order XXIX
கட்டளை XXIX

(D) Order XXIX A
கட்டளை XXIX A

47. What the Court shall order if the Receiver neglects or refuses to continue the suit of the insolvent plaintiff?
நொடிப்புநிலை வாதியின் வழக்கை பேணுநர் புறக்கணித்தால் அல்லது தொடர மறுத்தால், நீதிமன்றம் என்ன உத்தரவிட வேண்டும்?

(A) dismiss the suit and allow to file fresh suit
வழக்கை தள்ளுபடி செய்தும் மற்றும் புதிய வழக்கை தாக்கல் செய்யவும் அனுமதிக்கலாம்.

(B) award compensation to defendant
பிரதிவாதிக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடலாம்.

(C) award costs to the defendant
பிரதிவாதிக்கு வழக்கு செலவுகளை வழங்க உத்தரவிடலாம்.

(D) dismiss the suit and award compensation to the defendant
வழக்கை தள்ளுபடி செய்தும் மற்றும் பிரதிவாதிக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடலாம்.

48. Free legal service to indigent persons shall be provided by
ஆதரவற்ற நபர்களுக்கு (வறியவர்க்கு) இலவச சட்ட சேவையை ———————— வழங்க வேண்டும்.

(A) Government
அரசு

(B) High Court
உயர் நீதிமன்றம்

(C) Court which trying indigent suits
வறியவர் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம்

(D) NGO
என்.ஜி.ஓ

49. If a Minor suit is instituted without a next friend then the plaint will be taken off from the file and costs has to be paid by.
அடுத்த நண்பர் இல்லாமல் ஒரு இளவர் வழக்கு தொடங்கப்பட்டால், கோப்பில் இருந்து வழக்கு நீக்கப்பட்டு அத்தகைய வழக்கின் வழக்கு செலவுகள் ———————— ஆல் செலுத்தப்பட வேண்டும்.

(A) Minor
இளவர்

(B) Pleader
வழக்குரைஞர்

(C) Guardian
காப்பாளர்

(D) No cost has to be awarded
எந்த வழக்கு செலவுகளும் செலுத்தப்பட வேண்டியதில்லை

50. In a Minor suit, a Next Friend will be retired if he is
ஒரு இளவர் வழக்கில் அடுத்த நண்பர் ———————— என்றால் ஓய்வு பெறுவார்.

(A) not duly appointed by competent authority
தகுதிவாய்ந்த ஆணையத்தால் அவர் முறையாக நியமிக்கப்படாமல் இருந்தால்

(B) likely to affect the interest of minor
அவரால் இளவரின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு இருந்தால்

(C) acting adversely to the interest of minor
இளவரின் நலனுக்கு பாதகமாக செயல்பட்டால்

(D) unfit
தகுதியற்றவராக இருந்தால்

51. An application for setting aside any unreasonable interrogatories may be made within ———————— days after the service of such interrogatories.
எந்தவொரு நியாயமற்ற விடுவினாக்களையும் தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பம் அத்தகைய விடுவினாக்களின் சார்வு செய்தலிற்குப் பிறகு ———————— நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

(A) 5 days
5 நாட்கள்

(B) 7 days
7 நாட்கள்

(C) 10 days
10 நாட்கள்

(D) 14 days
14 நாட்கள்

52. When a Set-off may be permitted?
ஒரு எதிரிடை கோரிக்கை எப்போது அனுமதிக்கப்படலாம்?

(A) If the suit is for recovery of property
சொத்தை மீட்பதற்காக வழக்கு என்றால்

(B) If set-off claimed by the defendant is ascertained sum of money
பிரதிவாதியால் கோரப்பட்ட செட்-ஆஃப் பணம் உறுதிசெய்யப்பட்டால்

(C) If value of property recoverable is less than rupees two lakhs
மீட்கக்கூடிய சொத்தின் மதிப்பு ரூபாய் இரண்டு லட்சத்திற்கும் குறைவாக இருந்தால்

(D) If defendant presents a written statement of the suit
பிரதிவாதி வழக்கின் எதிர்வழக்குரையை முன்வைத்தால்

53. On rejection of a suit under Order VII, Rule 11 of Code of Civil Procedure, a fresh suit on the same cause of action under Order VII, Rule 13 of Code of Civil Procedure
சிவில் நடைமுறைச் சட்டத்தின் ஆணை VII, விதி 11ன் கீழ் ஒரு வழக்கு ———— நிராகரிக்கப்பட்டால், சிவில் நடைமுறைச் சட்டத்தின் விதி 13, ஆணை VII இன் கீழ் அதே காரணத்திற்காக ஒரு புதிய வழக்கு ———— ஆகும்.

(A) is barred under all circumstances
எல்லா சூழ்நிலைகளிலும் தடைசெய்யப்பட்டுள்ளது

(B) is not barred at all
தடை செய்யப்படவில்லை

(C) can be filed with the leave of the court
நீதிமன்றத்தின் அனுமதியுடன் தாக்கல் செய்யலாம்

(D) can be filed even without the leave of the court
நீதிமன்ற அனுமதி இல்லாமல் கூட தாக்கல் செய்யலாம்

54. The property which is not liable to attachment and sale in execution of decree is
தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் பற்றுகை மற்றும் விற்பனைக்கு உட்படாத சொத்து

(A) Government securities
அரசு பிணையங்கள்

(B) Promissory Note
கடனுறுதி சீட்டு

(C) Books of Account
கணக்கு புத்தகங்கள்

(D) Bond
பிணை பத்திரம்

55. In case of counter claim, the amount must be recoverable at
எதிர் உரிமைகோரலில், தொகையை ———————— இல் இருந்து மீட்டெடுக்க வேண்டும்.

(A) the date of suit
வழக்கு தேதியில்

(B) the date of written statement
எழுதப்பட்ட அறிக்கையின் தேதியில்

(C) the date of judgment
தீர்ப்பு தேதியில்

(D) the date of execution
நிறைவேற்றுல் தேதியில்

56. Pleadings need not be verified by.
வாதுரைகளை ———————— மூலம் சரிபார்க்க வேண்டியதில்லை.

(A) the party
தரப்பினர்

(B) one of the parties
தரப்பினர்களில் ஒருவர்

(C) Person acquainted with facts of the case
வழக்கின் பொருண்மைகளை அறிந்த நபர்

(D) the Advocate
வழக்கறிஞர்

57. Order V of Civil Procedure Code deals with summons to
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை V ———————— க்கான அழைப்பாணைகளைக் கையாள்கிறது.

(A) Plaintiff
வாதி

(B) Defendant
பிரதிவாதி

(C) Either plaintiff or defendant
வாதி அல்லது பிரதிவாதி

(D) Neither plaintiff nor defendant
வாதியும் அல்ல, பிரதிவாதியும் அல்ல

58. The plaint will be returned if it
__________ என்றால் வழக்குரை திரும்பப் பெறப்படும்.

(A) If it not presented before the proper court
உரிய நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாவிட்டால் என்றால்

(B) If it is insufficiently stamped
அது போதுமான அளவு முத்திரையிடப்படவில்லை என்றால்

(C) If it is filed without duplicate plaint
அது நகல் வழக்குரையில்லாமல் தாக்கல் செய்யப்பட்டால் என்றால்

(D) If it does not disclose cause of action
அது நடவடிக்கைக்கான காரணத்தை வெளிப்படுத்தவில்லை என்றால்

59. "Pleader" defined in CPC does not include the term
உ.ந.ச இல் வரையறுக்கப்பட்ட "பிலீடர்" என்பது __________ என்ற சொல்லைக் கொண்டிருக்கவில்லை.

(A) Advocate
வழக்கறிஞர்

(B) Vakil
வக்கீல்

(C) Prosecutor
வழக்குரைஞர்

(D) Attorney of a High Court
உயர் நீதிமன்ற வழக்கறிஞர்

60. Specific provisions for counter claims were added in CPC by the Amendment Act of
எதிர் உரிமைகோரல்களுக்கான குறிப்பிட்ட வகையங்கள் __________ இன் திருத்தச் சட்டத்தின் மூலம் உ.ந.ச இல் சேர்க்கப்பட்டன.

(A) 1956
(B) 1964
(C) 1976
(D) 1999

61. The Court is empowered to Pronounce a judgement upon the admissions made by the parties under
__________ இன் கீழ் தரப்பினரால் செய்யப்பட்ட ஒப்புதல்களின் மீது தீர்ப்புரையை வழங்குவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

(A) Order XII Rule 5
கட்டளை XII விதி 5

(B) Order XX Rule 5
கட்டளை XX விதி 5

(C) Order XII Rule 6
கட்டளை XII விதி 6

(D) Order XX Rule 1
கட்டளை XX விதி 1

62. Order XIII Rule 1 requires the parties or their pleaders to produce the documentary evidence.
கட்டளை XIII விதி 1 ன்படி ———————— தரப்பினர்கள் அல்லது அவர்களின் வழக்கறிஞர்கள் ஆவண ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(A) On or before settlement of issues
சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முன் அல்லது அதற்கு முன்

(B) On or before pronouncement of Judgment
தீர்ப்பு அறிவிக்கப்படும்போது அல்லது அதற்கு முன்

(C) On the time of filing of suit
வழக்குத் தாக்கல் செய்யும் நேரத்தில்

(D) At any stage of the suit
வழக்கு எந்த நிலையிலும்

63. Section 19 of Civil Procedure Code deals with.
உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 19 ———————— ஐக் குறிக்கிறது.

(A) Suit for wrong to movable property
அசையும் சொத்துக்கு மீதான தவறுக்கு எதிரான வழக்கு

(B) Suit for torts to immovable property
அசையா சொத்துக்கு மீதான தீங்குக்கு எதிரான வழக்கு

(C) Suit for recovery of immovable property
அசையா சொத்தினை மீட்பதற்கான வழக்கு

(D) Suit for Specific performance of contract
ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்திற்கான வழக்கு

64. Which of the following fundamental Principles of pleadings is incorrect?
பின்வரும் வாதுரைகளின் அடிப்படைக் கொள்கைகளில் எது தவறானது?

(A) Pleadings should state material facts
வாதுரைகள் முக்கிய பொருண்மைகளைக் கூற வேண்டும்

(B) Pleadings should state evidence
வாதுரைகள் ஆதாரங்களைக் கூற வேண்டும்

(C) Pleadings should not state law
வாதுரைகள் சட்டத்தை கூறக்கூடாது

(D) Pleadings should be stated in concise form
வாதுரைகள் சுருக்கமான வடிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்

65. The Court should not allow amendment of pleadings
வாதுரைகளில் திருத்தம் செய்ய நீதிமன்றம் ———— அனுமதிக்கக் கூடாது.

(A) After the commencement of trial
வழக்கு விசாரணை தொடங்கிய பிறகு

(B) After passing of judgment
தீர்ப்புரை வழங்கிய பிறகு

(C) After first appeal
முதல் மேல்முறையீட்டிற்குப்பிறகு

(D) Can allow at any stage of the suit
வழக்கின் எந்த நிலையிலும் அனுமதிக்கலாம்

66. The Court cannot grant injunction against.
———— எதிராக நீதிமன்றம் தடை விதிக்க முடியாது

(A) appointment of receiver
சொத்தாட்சி பேணுநரின் நியமனதிற்கு

(B) execution of a decree
ஒரு தீர்ப்பணையின் நிறைவேற்றுதலுக்கு

(C) attachment of property
சொத்து பற்றுகைக்கு

(D) land acquisition proceedings
நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு

67. Which of the following statement is wrong regarding Receiver?
சொத்தாட்சி பேணுநரைப் பற்றி பின்வரும் எந்த அறிக்கை தவறானது?

(A) Office of receiver is not hereditary
பேணுநரின் அலுவலகம் பரம்பரை பதவி அல்ல

(B) Appointment of receiver is a discretionary power of the court
பேணுநரை நியமிப்பது நீதிமன்றத்தின் விருப்ப அதிகாரமாகும்

(C) Appointment of receiver is a protective relief
பேணுநரை நியமிப்பது ஒரு பாதுகாப்பு நிவாரணமாகும்

(D) Order appointing or refusing to appoint a receiver is non appealable one
பேணுநரை நியமிக்கும் அல்லது நியமிக்க மறுக்கும் ஆணையானது மேல்முறையீடு செய்ய முடியாத ஒன்றாகும்

68. Service of foreign summonses has been dealt under ———— of CPC.
வெளிநாட்டு அழைப்பாணைகளின் சார்வு செய்தலை உ.ந.ச.யின் ———— கீழ் கையாளப்பட்டுள்ளது.

(A) Section 27
பிரிவு 27

(B) Section 28
பிரிவு 28

(C) Section 29
பிரிவு 29

(D) Section 31
பிரிவு 31

69. In lieu of issuing a commission, the Court may issue ———— to examine a witness residing at any place not within India.
ஒரு ஆணையத்தை வழங்குவதற்குப் பதிலாக, இந்தியாவிற்குள் இல்லாத எந்த இடத்திலும் வசிக்கும் சாட்சியை விசாரிக்க நீதிமன்றம் ———— ஐ வழங்கலாம்.

(A) Letter of Request
கோரிக்கை கடிதம்

(B) Summon
அழைப்பாணை

(C) Warrant
பிடியாணை

(D) Notice
அறிவிக்கை

70. Suits against Foreign Rulers and Ambassadors are dealt under ———— of CPC.
வெளிநாட்டு ஆட்சியாளர்கள் மற்றும் தூதர்களுக்கு எதிரான வழக்குகள் உ.ந.ச.யின் ———— கீழ் கையாளப்பட்டுள்ளது.

(A) Section 83
பிரிவு 83

(B) Section 84
பிரிவு 84

(C) Section 85
பிரிவு 85

(D) Section 86
பிரிவு 86

71. Suit relating to public charities is ———— in CPC.
பொது அறக்கட்டளைகள் தொடர்பான வழக்கு உ.ந.ச. இல் ———— ஆகும்.

(A) a general proceeding
ஒரு பொதுவான நடவடிக்கை

(B) a special proceeding
ஒரு சிறப்பு நடவடிக்கை

(C) a supplemental proceeding
ஒரு துணை நடவடிக்கை

(D) an incidental proceeding
ஒரு இடைநிகழ்வான நடவடிக்கை

72. Compensation for obtaining arrest, attachment or injunction on insufficient grounds is ———— proceeding under CPC.
உ.ந.ச. இன் கீழ், போதுமானதாக இல்லாத காரணங்களுக்காக கைது, பற்றுகை அல்லது தடை உத்தரவு பெறுவதற்கு இழப்பீடு கோருவதற்கான நடவடிக்கைகள் ———— ஆகும்.

(A) a general proceeding
ஒரு பொதுவான நடவடிக்கை

(B) a special proceeding
ஒரு சிறப்பு நடவடிக்கை

(C) a supplemental proceeding
ஒரு துணை நடவடிக்கை

(D) an incidental proceeding
ஒரு இடைநிகழ்வான நடவடிக்கை

73. No second appeal shall lie except on the ground mentioned in Section
பிரிவு ———— இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களைத் தவிர வேறு எந்த காரணங்களிலும் இரண்டாம் மேல்முறையீடு அமையாது.

(A) 99 (B) 99A
(C) 100 (D) 101

74. No second appeal shall lie from any decree when the subject matter of the original suit is for recovery of money not exceeding Rs..
பணத்தை மீட்டெடுப்பதற்கான அசல் வழக்கின் கருப்பொருள் ரூ. ———— க்கு மிகாமல் இருந்தால், அவ்வழக்கிலிருந்து வரும் தீர்ப்பாணைக்கு எதிராக இரண்டாம் மேல்முறையீடு அமையாது.

(A) Rs.25,000
ரூ.25,000

(B) Rs.50,000
ரூ.50,000

(C) Rs.10,000
ரூ.10,000

(D) Rs.20,000
ரூ.20,000

75. Powers of Appellate Court has been dealt under Section ———— of CPC.
மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் சிபிசியின் ———— பிரிவின் கீழ் கையாளப்பட்டுள்ளது.

(A) 105 (B) 107
(C) 108 (D) 109

76. Section ———— of CPC empowers a subordinate court to state a case and refer the same for the opinion of the High Court.
உ.ந.ச. இன் பிரிவு ———— கீழ் துணை நீதிமன்றங்களுக்கு, உயர் நீதிமன்றத்தின் முன் ஒரு வழக்கைக் கூறுவதற்கும் அதை உயர் நீதிமன்றத்தின் கருத்துக்காகப் பரிந்துரைக்கவும், அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(A) Section 112
பிரிவு 112

(B) Section 113
பிரிவு 113

(C) Section 114
பிரிவு 114

(D) Section 115
பிரிவு 115

77. The revisional power under Section 115 of C.P.C. is in the nature of
சி.பி.சி.யின் 115வது பிரிவின் கீழ் உள்ள சீராய்வு அதிகாரமானது ————தன்மையில் உள்ளது.

(A) Writ of Certiorari
நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை

(B) Writ of Mandamus
மேல்மன்ற நீதிப்பேராணை

(C) Writ of Prohibition
தடை உத்தரவு நீதிப்பேராணை

(D) Writ of Quo Warranto
தகுதி வினவும் நீதிப்பேராணை

78. A revision application lies only on the ground of
ஒரு சீராய்வு விண்ணப்பம் ———— இன் அடிப்படையில் மட்டுமே அமையும்.

(A) Jurisdictional error
அதிகார வரம்பு பிழை

(B) Question of fact
பொருண்மையை பற்றிய வினா

(C) Question of law
சட்டம் பற்றிய வினா

(D) Question of fact and law
பொருண்மை மற்றும் சட்டம் பற்றிய வினா

79. An order rejecting or refusing an application for review is
மறு ஆய்வுக்கான விண்ணப்பத்தை நிராகரிக்கும் அல்லது மறுக்கும் உத்தரவு மீது.

(A) appealable
மேல்முறையீடு செய்யலாம்

(B) not appealable
மேல்முறையீடு செய்ய முடியாது

(C) Letters Patent appeal alone lies
கடித காப்புரிமை மேல்முறையீடு மட்டுமே செய்ய முடியும்

(D) Second appeal alone lies
இரண்டாவது மேல்முறையீடு மட்டுமே செய்ய முடியும்

80. Restitution cannot be ordered against the
———————— க்கு எதிராக மறுசீரமைப்பு உத்தரவிட முடியாது.

(A) Parties to the litigation
வழக்கின் தரப்பினர்கள்

(B) Legal representatives of the parties
தரப்பினர்களின் சட்ட பிரதிநிதிகள்

(C) Transferee *pendente lite*
வழக்கிடையில் உரிமை மாற்றம் பெறுபவர்

(D) Bonafide auction purchaser
நல்லெண்ணத்துடன் ஏலம் வாங்குபவர்

**123/DD/25**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## THE CIVIL AND CRIMINAL JUDICIAL TEST FOR MEMBERS OF THE JUDICIAL DEPARTMENT — PART - II

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

**விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்**

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR questions.**

ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு பதிலளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Explain about Review and Revision.

   மறு ஆய்வு மற்றும் சீராய்வு பற்றி விளக்குக.

2. Explain the provisions relating to appointment of commissioner under Civil Procedure Code.

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஆணையர் நியமனம் தொடர்பான விதிகளை விளக்குக.

3. What is *Res subjudice*? State the differences between *Res subjudice* and *Res judicata.*

   பின் வழக்குத் தடை என்றால் என்ன? பின் வழக்குத் தடைக்கும் முன் தீர்ப்புத் தடைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறவும்.

4. Explain about the provisions dealing with attachment before judgment.

   தீர்ப்புக்கு முன் பற்றுகை தொடர்பான விதிகள் பற்றி விளக்கவும்.

5. Explain about arrest in an execution of a decree.

   ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் கைது பற்றி விளக்குக.

6. Discuss about the suits by or against the Minor under Civil Procedure Code.

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இளவருக்காக அல்லது அவர்களுக்கு எதிரான வழக்குகள் பற்றி விவாதிக்கவும்.

———————